بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 03/12/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

இன்று ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு ஆரம்பமாகிறது. அறியாமையின் காலகட்டத்தில் அன்னாரது பெயர் அப்துல் கஅபாவாக இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதனை அப்துல்லாஹ் என்று மாற்றி வைத்தார்கள். அன்னாரது சுட்டுப்பெயர் அபூபக்ர் மற்றும் பட்டப்பெயர்கள் அதீக் மற்றும் ஸித்தீக் ஆகும். அன்னார் யானை சம்பவ ஆண்டுக்கு, இரண்டு வருடங்கள் ஆறு மாதங்களுக்குப் பிறகு கிபி 573 ஆம் ஆண்டு பிறந்தார்கள். அன்னார் குறைஷிய கோத்திரமான பனூ தைம் பின் மர்ரஹ்வைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னாரது தந்தையாரின் பெயர் உஸ்மான் பின் ஆமிர் ஆகும். அவர்களது சுட்டுப்பெயர் அபூ கஹாஃபா ஆகும். தாயாரின் பெயர் ஸல்மா பின்த் ஸஹர் பின் ஆமிர் ஆகும். அவர்களது சுட்டுப்பெயர் உம்முல் ஹைர் ஆகும். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களது வம்சாவழி ஏழாவது தலைமுறையில் மர்ரஹ் என்பவர் மூலம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உடன் இணைகிறது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது பெற்றோர்கள் அன்னாரது வஃபாத்திற்குப் பிறகும் உயிருடன் இருந்தார்கள். அவர்கள் தங்களது மகனின் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது சொத்திலும் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது வஃபாத்திற்குப் பிறகு முதலில் அன்னாரது தாயாருடைய மரணம் நிகழ்ந்தது. பிறகு அன்னாரது தந்தையார் ஹிஜ்ரி 14 ஆம் ஆண்டில் 97 வயதில் மரணம் அடைந்தார்கள். அன்னாரது தந்தையார் மக்கா வெற்றியின் போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆயினும், தாயார் ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுள் ஒருவராக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரது தோழர்களின் எண்ணிக்கை வெறும் 38 ஆக இருந்தபோது, அச்சமயம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாரே அர்க்கமில் மறைந்திருந்து இறை வணக்கம் புரிந்து வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கோரிக்கை வைத்து மஸ்ஜித் ஹராமுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு மக்களுக்கு அல்லாஹ்வின்பால் அழைப்பு விடுத்தார்கள்.

எனவே அங்கிருந்த மக்கள் முஸ்லிம்கள் மீது பாய்ந்து, அவர்களை கடுமையாக தாக்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை காலடியில் போட்டு எந்த அளவுக்கு மிதித்தார்கள் என்றால், சந்தேகத்திற்கிடமின்றி அன்னார் மரணமடைந்து விட்டார்கள் என்று கருதப்பட்டது. அன்னாருக்கு சிறிது மயக்கம்

தெளிந்ததும் முதலில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய நிலை பற்றி விசாரித்தார்கள். பிறகு தமது தாயாரை, ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் சகோதரியாகிய உம்மு ஜமீலிடம் அனுப்பி வைத்தார்கள். உம்மு ஜமீல் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அவர்கள் அன்னாரது தாயாருக்கு முன் ஹுஸூர் (ஸல்) அவர்களைப் பற்றி பேசுவதற்குத் தயங்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது தாயார் இந்த இரகசியத்தை வெளிப்படுத்த மாட்டார்கள் என்று நம்பிக்கையூட்டினார்கள். இதனால் உம்மு ஜமீல் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாரே அர்க்கமில் நலமாக இருக்கிறார்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'இறைவன் மீது ஆணையாக! நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் ஆஜராகும் வரை உணவையும் உட்கொள்ள மாட்டேன். தண்ணீரையும் அருந்த மாட்டேன்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதே நிலைமையில் தாங்கிப் பிடித்தவாறு, தட்டுத்தடுமாறி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் ஆஜரானார்கள். அச்சமயம் அன்னார் மீது கடுமையான உருக்கம் ஏற்பட்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்னாரது நிலையைக் கண்டதும் முத்தம் கொடுப்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் குனிந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது தாயாரது நன்நடத்தை குறித்து எடுத்துக் கூறினார்கள். அல்லாஹுத்தஆலா தங்கள் மூலமாக இவர்களை நெருப்பில் இருந்து காப்பாற்ற சாத்தியம் உள்ளது என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது தாயாருக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்கள். எனவே அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது பட்டப்பெயரான 'அத்தீக்' பற்றி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களது குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது: ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் انت عتيق الله من النار தாங்கள் அல்லாஹ்வால் நெருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவர் ஆவீர்கள் என்று கூறினார்கள். சில வரலாற்றாசிரியர்கள் அத்தீக் என்பது அன்னாரது பெயராக இருந்தது என்று கூறுகிறார்கள். ஆனால் அது சரியானது அல்ல. அன்னாரது இரண்டாவது பட்டப் பெயரான ஸித்தீக் என்பது குறித்து, அறியாமை கால கட்டத்தில் இந்த பட்டப்பெயர் அன்னாருக்கு சூட்டப்பட்டது என்ற குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது செய்திகளை உடனடியாக வழிமொழிந்த காரணத்தினால் ஸித்தீக் என்ற பெயர் தோன்றி விட்டது என்றும் கூறப்படுகிறது. இவ்வாறாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இரவு நேரத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பைத்துல் மக்தஸுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அப்போது காலையில் மக்கள் அது தொடர்பாக பேசிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களுக்கு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் என்று தெரிந்ததும், அன்னார் நிச்சயமாக இதுவே உண்மையாகும் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இச்சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கருத்தை வழிமொழிந்ததும் மக்கள், தாங்கள் பகுத்தறிவுக்குப் புறம்பான அந்த விஷயத்தையும் ஏற்றுக் கொள்வீர்களா? என்று

கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ‘நான் காலையும் மாலையும் அன்னார் மீது விண்ணிலிருந்து இறை வார்த்தைகள் இறங்குகின்றன என்பதனையும் ஏற்றுக்கொள்கிறேன்’ என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சித்தீக் என்ற பட்டத்தை வழங்கிய போது, அன்னாரிடம் என்னென்ன சிறப்பம்சங்கள் இருந்தன என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் காண்பித்த உண்மையின் முன்னுதாரணம் காணக் கிடைக்காது. அத்தீக் மற்றும் சித்தீக் ஆகிய பெயர்கள் போக, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு இருந்த இதர பட்டப்பெயர்கள், கலீஃபத்துர் ரஸூலில்லாஹ் (அல்லாஹ்வின் தூதரின் கலீஃபா), அவ்வாஹுன்; அதாவது மிகவும் மென்மையான உள்ளம் படைத்தவர், அமீருஷ் ஷாகிரீன்; அதாவது நன்றி செலுத்துபவர்களின் தலைவர், ஸானி இஸ்னைன்; அதாவது இருவருள் ஒருவர் - இந்த பட்டப்பெயர் அல்லாஹுத்தஆலா அன்னாரை விளித்து அழைத்த பெயராகும். மதீனா ஹிஜ்ரத்தின் போது இறங்கிய இறைவனது வழிகாட்டல் இவ்வாறு உள்ளது:

اِذْ اَخْرَجَهُ الَّذِيْنَ كَفَرُوْا ثَانِيَ اثْنَيْنِ اِذْ هُمَا فِي الْغَارِ اِذْ يَقُوْلُ لِصَاحِبِهٖ لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا

நிராகரித்த மக்கள் அவரை இருவருள் ஒருவராக இருந்த நிலையில் நாட்டை விட்டு வெளியேற்றியபோது, அந்நிலையில் அவர்கள் இருவரும் குகைக்குள் இருந்தனர். மேலும் அவர் தம்முடன் இருந்தவரிடம் கவலை அடையவேண்டாம் நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான் என்று கூறினார். எனவே அல்லாஹ் அவர்கள் மீது தனது அமைதியினை இறக்கினான்.

**ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அல்லாஹுத்தஆலா துன்பத்தின் போதும் கடினமான தருவாயிலும் தனது நபி (ஸல்) அவர்களுக்கு அன்னாரின் (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின்) மூலமாக ஆறுதலை வழங்கினான். மேலும் அஸ்ஸித்தீக் என்ற பெயரையும் ஈருலக நபி (ஸல்) அவர்களுடைய அருகாமையையும் குறிப்பாக வழங்கினான். மேலும் அல்லாஹுத்தஆலா அன்னாரை ஸானி இஸ்னைன் என்ற பட்டப்பெயரால் பெருமை அடையச் செய்தான். திருக்குர்ஆன் இவ்வாறு புகழ்ந்துரைத்த ஏதேனும் மனிதரைப் பற்றியும், அவரது மறைவான நிலைகளில் உள்ள சந்தேகங்களை விலக்கியது பற்றியும் உங்களில் யாரும் அறிவீர்களா? அன்னாரது ஒரு பட்டப்பெயர் ஸாஹிபுர் ரஸூல் (தூதரின் தோழர்) என்றும் இருந்தது. ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய வழிகாட்டலின் அடிப்படையில் அதிகாரம் ‘அத்தவ்பா’ ஓதப்பட்டது. اِذْ يَقُوْلُ لِصَاحِبِهٖ என்ற வசனம் வந்ததும் அன்னார் அழத் தொடங்கினார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தவன் ஆவேன் என்று கூறினார்கள்.

அன்னாரது ஒரு பட்டப்பெயர் ஆதமே ஸானி ஆகும். இந்தப் பட்டப் பெயரை அன்னாருக்கு ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சூட்டினார்கள். தமது ஒரு கடிதத்தில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் ஆதமே ஸானி (இரண்டாவது ஆதம்) ஆவர்கள். ஸிர்ருல் கிலாஃபா எனும் நூலில், ‘இறைவன் மீது ஆணையாக! அன்னார் இஸ்லாத்திற்கு ஆதமே ஸானி (இரண்டாவது ஆதம்)

ஆவார்கள். மேலும் மக்களில் சிறந்தவர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது ஒளிகளின் முதல் வெளிப்பாடு ஆவார்கள்.

அன்னாரது ஒரு பட்டப் பெயர் கலீலுர் ரஸூல் (தூதரின் நண்பர்) என்பதுமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவேளை நான் எவரையாவது கலீலாக ஆக்கியிருந்தால் அபூபக்ர் அவர்களை ஆக்கியிருப்பேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நட்பு என்பது நாடி நரம்புகளில் ஒன்றி இருப்பதாகும். மேலும் அது அல்லாஹ்வுக்கே உரியதாகும். மேலும் அவனுக்கு மட்டுமேயானதாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது இந்தத் தூய வார்த்தைகளின் பொருள் அல்லாஹுத்தஆலாவின் மீதான நேசத்தில் எவரும் இணையாக முடியாது. உலகில் எவரையேனும் நண்பராக ஆகியிருந்தால் அபூபக்ர் அவர்களை ஆக்கி இருப்பேன் என்று கூறினார்கள்.

அன்னாரது சுட்டுப்பெயர் 'அபூபக்ர்' என்பது பற்றி பல்வேறு விதமான காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. உதாரணமாக 'பக்ர்' என்று இளம் ஒட்டகத்தை அழைப்பார்கள். அன்னார் ஒட்டகங்களை வளர்ப்பதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள். எனவே அன்னாருக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. சிலரது கருத்தின்படி அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதில் மற்றவர்களைவிட முன் இருந்தார்கள். எனவே தான், அல்லது சிலரைப் பொறுத்தவரை அன்னாரது தூய இயல்பில் 'இப்த்திகார்' அதாவது முன் நிற்றலின் காரணத்தினால் அபூபக்ர் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களது உருவத்தைப் பற்றி எடுத்துரைத்தார்கள்: அன்னார் வெள்ளை நிறத்தை உடையவராகவும் ஒல்லியான தேகம் உடையவராகவும் மெல்லிய இடையை உடையவராகவும் பரந்த நெற்றியை கொண்டவராகவும் இருந்தார்கள். கன்னங்களில் சதை குறைவாக இருந்தது. மேலும் கண்கள் உள்நோக்கி இருந்தன. அன்னார் மருதாணி மற்றும் கதம் (எனும் ஒருவகை பூண்டு அல்லது இலைச்) சாயத்தால் முடிக்கு நிறம் பூசி வந்தார்கள். அன்னார் மென்மையான இயல்பு உடையவராகவும் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவராகவும் நேசத்திற்குரியவராகவும் இருந்தார்கள். அன்னார் வியாபாரம் செய்து வந்தார்கள். மேலும் வியாபாரத்தின் வெற்றிக்கு அன்னாரது ஈர்க்கும் தன்மை கொண்ட ஆளுமை மற்றும் ஈடற்ற நற்பண்புகளும் காரணமாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நபியாக தோன்றிய போது, (வியாபாரத்தில்) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது மூலதனம் 40 ஆயிரம் திர்ஹமாக இருந்தது.

இஸ்லாத்திற்கு முன்பும் அன்னார் தமது மேன்மையான நல்லொழுக்கங்கள் மற்றும் செல்வ செழிப்பின் காரணமாக குரைஷியர்களில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தார்கள். அன்னார் குரைஷிய தலைவர்களுள் ஒருவராக இருந்தார்கள். அவர்களுக்கு ஆலோசனை வழங்கக்கூடியவராக இருந்தார்கள். அன்னார் அனைவரையும் விட தூய, நல்ல மக்களுள் ஒருவராக இருந்தார்கள். அன்னார் கண்ணியத்திற்குரிய தலைவராகவும் வள்ளலாகவும் இருந்தார்கள். தமது செல்வத்திலிருந்து மிகஅதிகமாக செலவு செய்து வந்தார்கள். தமது சமுதாயத்தில் அனைவருக்கும் விருப்பமானவராகவும் நேசத்திற்குரியவராகவும் இருந்தார்கள். கனவுகளுக்கு விளக்கம் கூறுவதில் ஆழமான ஞானம் அன்னாருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதேபோன்று, வம்சாவழியைப் பற்றிய ஞானத்திலும் அன்னார் உயரிய அறிவைப் பெற்றிருந்தார்கள்.

இஸ்லாத்திற்கு முன்பு கொலைக்கான ஈட்டுத் தொகையை ஒன்று திரட்டும் பொறுப்பு பனூ தைம் பின் மர்ரஹ் கோத்திரத்திற்கு இருந்தது. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இளைஞர் ஆனதும் இந்தப் பொறுப்பு அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. ஏழைகள் மற்றும் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிவதற்கான உடன்படிக்கையாகிய ஹில்ஃபல் ஃபுஸூலிலும் அன்னார் இணைந்திருந்தார்கள். நபித்துவத்திற்கு முன்பிருந்தே அன்னாருக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது சிறப்பான நேசமும் பற்றுறுதியும் இருந்தது. பெரும்பாலான வியாபார பயணங்களிலும் அன்னார் (ஸல்) அவர்களுடன் பயணிக்கும் நற்பேறு கிடைக்கப்பெற்றது.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடனான தொடர்பில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முதலிடம் வகித்தார்கள். அறியாமைக் காலத்திலிருந்தே அன்னார் இணைவைத்தலை வெறுத்து வந்தார்கள். ஒரு போதும் எந்த ஒரு சிலைக்கும் சிரம் பணிந்ததில்லை. அதேபோன்று அறியாமைக் காலத்திலிருந்தே அன்னார் மதுவை வெறுத்து வந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது: ஒருநாள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹக்கீம் பின் ஹஸாமின் வீட்டில் இருந்தார்கள். ஹக்கீமின் அடிமைப்பெண், 'உமது அத்தை கதீஜா தமது கணவர் மூஸாவைப் போன்று நபியாக அனுப்பப்பட்டுள்ளார் என்று கூறுகிறார்கள்' என்று கூறினாள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அமைதியாக எழுந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

'ஸீரத் இப்னு ஹிஷாம்' என்ற நூலின் விளக்க உரையான 'அர்ரவ்ஸுல் உன்ஃப்' -ல் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது: 'நிலவு மக்காவில் இறங்கி வருகிறது. மேலும் துண்டு துண்டாகி அனைத்து இடங்களிலும் வீடுகளிலும் பரவுகிறது. பிறகு அந்த நிலவு தமது மடியில் ஒன்று சேர்க்கப்படுகிறது' என்று ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) கனவு கண்டார்கள். 'ஸுபுலுல் ஹுதா' வில் குறிப்பிடப்பட்டுள்ளது: அன்னார் சிரியாவில் வியாபாரத்திற்காக சென்றிருந்த போது இந்தக் கனவை கண்டார்கள். பஹீரா எனும் துறவி இந்தக் கனவிற்கான விளக்கத்தில், 'உமது சமுதாயத்தில் ஒரு நபி தோன்றுவார். நீர் அவரது வாழ்வில் அவரது மந்திரியாக இருப்பீர். மேலும் அவரது வஃபாத்திற்குப் பிறகு அவரது கலீஃபாவாக ஆவீர்' என்று கூறினார்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இதுதொடர்பாக அதிகமான அறிவுப்புகளும் இருக்கின்றன. அவற்றை இன்ஷா அல்லாஹ் இனிமேல் எடுத்துரைப்பேன் என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللهِ رحمكم الله اِنَّ اللهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி சுல்தான் மைதீன்)**